## அ.தி.மு.க. அதிருப்தி எம்.எல்.ஏ.க்களை வளைப்பதற்கு குதிரை பேரம்!

# இதுதான் விஜய்யின் கிளீன் பாலிடிக்ஸா?




“தமிழக சட்டமன்ற தேர்தல் களத்தில் எத்தனை பேர் இருந்தாலும் இரண்டே இரண்டு பேருக்கு மட்டும்தான் போட்டி. ஒன்று த.வெ.க., மற்றொன்று தி.மு.க.” இப்படி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தேய்ந்த ரெக்கார்டு போல் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பேசிய வார்த்தைகளை இன்று வரை யாரும் மறந்திருக்க வாய்ப்பில்லை. எப்படியோ ஒரு வகையில் அவரது பேச்சு பலித்து விட்டது. ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் போட்டியிட்ட 233 தொகுதிகளில் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகத்திற்கு 108 இடங்கள் கிடைத்தது. தனி மெஜாரிட்டி கிடைக்காவிட்டாலும் தனிப்பெரும் கட்சியாக அதிக தொகுதிகளை த.வெ.க. பெற்றது. இதை வைத்து எப்படி ஆட்சியை அமைப்பது? என்ற குழப்பத்தில் பரிதவித்து நின்றது தமிழக வெற்றிக்கழகம்.

இந்தச்சூழலில் திமுகவின்கடும் உழைப்பால் 5 தொகுதிகளை கைப்பற்றிய காங்கிரஸ் கட்சி, கூட்டணி தர்மத்தை சுக்குநூறாக உடைத்து தள்ளிவிட்டு விஜய்க்கு ஆதரவுக் கரம் நீட்டியது. அப்புறம் என்ன? நீங்க தான் முதலமைச்சர் என்று கட்சியினர் உசுப்பி விட, தமிழ் நாடு பொறுப்பு கவர்னர் அர்லேகரை சந்தித்தார் விஜய். ஆனால் மெஜா ரிட்டிக்கான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு கடிதத்துடன் வந்தால் தான், ஆட்சி அமைப்பதற்கு அழைக்க முடியும் என்று கிடுக்கிப்பிடி போட் டார் ஒன்றிய பா.ஜ.வின் முகவராக செயல்படும் பொறுப்பு கவர்னர் அர்லேகர்.

‘மதவாத சக்திகளை எந்தநிலையிலும் எதிர்ப்பேன்’ என்று ஏற்கனவே முழங்கிய விஜய், ஆட்சியை தக்கவைக்கும் முயற்சியில் தனது இமேஜ், டேமேஜ் ஆகிவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இதனால் மதவாத சக்திகள் மீதான எதிர்ப்பில் தீவிரம் காட்டும் தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கட்சிகளை அணுகி தனது அரசுக்கான ஆதரவை தரும்படி அழைப்பு கடிதம் கொடுத்தார். காங்கிரசை போல் நன்றி மறந்துவிடாமல் தி.மு.க. கூட்டணி தலைவரான முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனத்திற்கு இதை கொண்டு சென்றனர் அதில் இடம் பெற்ற கூட்டணி கட்சிகள்.

“மதவாத சக்திகள் தலைதூக்க எந்த நிலையிலும் அனுமதிக்க கூடாது. மக்கள் தந்த தீர்ப்புக்கு பதிலாக கவர்னர் ஆட்சி அமைவதற்கு வழிவகுக்க கூடாது” என்று இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகள் தங்களது ஆதரவை தமிழக வெற்றிக் கழகத்திற்கு வழங்கின. த.வெ.க. ஆட்சி அமைவதற்கு எந்த நிலையிலும் இடையூறாக இருக்க மாட்டோம் என்று பெருந்தன்மையோடு அறிவித்தார் கூட்டணி தலைவர் மு.க.ஸ்டாலின். இப்படி பல்வேறு பரபரப்பான நிகழ்வுகளுக்கு மத்தியில் கடந்த 13ம் தேதி, சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. இதற்கு முந்தையநாள் நடந்த நிகழ்வுகளும், அதன் தொடர்ச்சியாக நம்பிக்கை வாக்கெடுப்பில் நடந்த டுவிஸ்ட்டும் தான், தற்போது தமிழ்நாட்டு மக்களின் ஹாட் டாபிக்.

தேர்தல் பிரசாரத்தில் பெயரை கூட குறிப்பிடாமல் மற்றும் பலர் என்று அ.தி.மு.க.வையும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவராக இருந்த எடப்பாடி பழனிசாமியையும் விமர்சித்தார் விஜய். ஆனால் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஒருநாள் முன்பு, எடப்பாடி பழனிசாமிக்கு எதிர்ப்பு தெரிவித்து, விஜய்யை ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் போர்க்கொடி தூக்கினர் தற்போது எம்.எல்.ஏ.க்களாக உள்ள முன் னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட 25 பேர். இவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து பூங்கொத்து கொடுத்து மகிழ்ச்சியூட்டினார் விஜய். நம்பிக்கை வாக்கெடுப்பில் இவர்கள் அனைவரும் விஜய்யின் த.வெ.க. அர சுக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஒரு புறம் தன்னை தூயசக்தி என்றும், தி.மு.க.வை தீயசக்தி என் றும் வசைபாடினார் விஜய். ஆனால் அந்த தி.மு.க.வின் கடும் உழைப்பால் வெற்றி பெற்ற கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு முதல்வருக்கான இருக்கையில் அமர முடிவு செய்தார் விஜய். மற்றொரு புறம், ஒரு பொருட்டாகவே அவர் நினைக்காத அ.தி.மு.க.வில் இருந்து தனக்கு ஆத ரவு தரும் எம்.எல்.ஏ.க்களுக்கும் தூண் டில் போட்டுள்ளார் அவர். தன்னை தூயசக்தி என்று கூறிக்கொள்ளும் விஜய், தன்னால் இகழப்பட்ட கட் சிகளின் எம்.எல்.ஏ.க்களுக்கு வலைவிரித்து பெரும் குதிரை பேரத்திற்கும் வழிவகுத்துள்ளார். இதன் காரணமாக அவர், மாற்றத்திற்கான தூய சக்தி அல்ல. ஜனநாயகத்தை இழி வுபடுத்தும் துர்நாற்ற சக்தி என்று சாட்டையை சுழற்றியுள்ளார் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன். இதேபோல் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினும், இது தூயசக்தி அல்ல. பிற கட்சி சட்டமன்ற உறுப் பினர்களை தூக்கும் சக்தி என்று வெளிப்படையாக தெரிவித்திருப்பது, தமிழக மக்கள் மன்றத்தில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

அனுபவம் இல்லாமல் ஆட்சித் திறன் இன்மை என்பது ஒருபுறம் இருக்கிறது. அதேநேரத்தில் அரசியல் பேரங்கள் என்பதும், அதற்கு அன்ப ளிப்பாக உயர்பதவிகள் என்பதும் வரும் நாட்களில் கண்டிப்பாக அரங் கேறும். இது மிஸ்டர் கிளீன் என்ற விஜய்யின் இமேஜ் முகத்திரையை அகற்றி பெரும் டேமேஜ் ஆக்கும் என்பது மட்டும் நிதர்சனம். அதை உணர்ந்து விஜய் செயல்படுவாரா? என்பதும் இன்றைய மில்லியன் டாலர் கேள்விகளில் ஒன்று என்கின் றனர் தமிழக அரசியல் நோக்கர்கள்.

### தொடக்கமே இப்படி இருந்தா?

தமிழக சட்டமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பு மற்றும் தமிழக வெற்றிக்கழக அரசின் செயல்பாடுகள் குறித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளி யிட்டுள்ள அறிக்கை ஒன்று பொதுமக்கள் மத்தியில் மிகுந்த கவனம் பெற்றுள்ளது.

“கிளீன் பாலிடிக்ஸ் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவங்க, Dirty politics (அழுக்கு அரசியல்) பண்ணிக்கிட்டிருக்காங்க. பிளவு பட்ட அதிமுக என்னும் குழம்பிய குட்டையில, மீன்பிடிக்க முயற்சி பண்ணி அவங்க உறுப்பினர்களை விலைக்கு வாங்கி இருக்காங்க. உங்களோட ஸ்டார் டிங்கே இப்படி இருந்தா பினிஷிங் எப்படி இருக்கும்? இது தூயசக்தியா? இல்ல, அடுத்த கட்சி எம்எல்ஏக்களை தூக்குற சக்தியா? என தமிழக வெற்றி கழகத் திற்கு வாக்களிச்ச மக்களே வருந்தும் நிலை உருவாகிடிச்சு. மாண்புமிகு முதல் வர் அவர்களே, உங்கள் செயல்பாடுகளை மக்கள் தொடர்ந்து பார்க்குறாங்க. அடுத்து பிளவுபட்ட அதிமுக உறுப்பினர்களுக்கு நீங்க என்ன ரிட்டன் கிப்ட் கொடுக்க போறீங்க என்பதையும் மக்கள் பார்க்கத்தான் போறாங்க. எங்களை பொறுத்த வரை திராவிட முன்னேற்ற கழகம் தன் கொள்கையில் உறுதியா இருந்து ஆக்கப் பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படும்,” என்று குறிப்பிட்டுள்ளார்.

### வெறும் பேச்சு மட்டும் தானா?

“முகத்தை மூடிக்கொண்டு நான் யாரையும் சந்திக்க மாட்டேன். எனது சந்திப் புகள் வெளிப்படையாகவே இருக்கும். நண்பர்களோ, எதிரிகளோ 8 கோடி பேரும் என் மக்கள். விஜய் தவறு செய்ய மாட்டான். தவறு செய்யவும் விடமாட்டான். தவறு செய்யும் எண்ணம் இருந்தால் அதை இப்போதே அழித்து விடுங்கள். இது புதிய தொடக்கம். புதிய சகாப்தம் தொடங்கியது,”. இப்படித் தான் கடந்த 10ம்தேதி, தமிழ்நாட்டின் புதிய முதல மைச்சராக பதவியேற்ற போது முழங்கினார் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய். ஆனால் ஆட்சி அமைப்பதற்கு சிக்கல் ஏற்பட்டபோது, பட்டினம்பாக் கத்தில் உள்ள விஜய் வீட்டிற்கு ஒருவர் முகத்தை மூடியபடி வந்தார். அவர் யார் என்று சட்டபேரவையில் பிரேமலதா கேள்வி எழுப்பி இருந்தார். இதேபோல் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் விமர்சித்து இருந்தனர். ஆனால், இது வரை அந்த நபரை பற்றி விஜய் வாயை திறக்கவில்லை.

### பதவியை தக்க வைப்பதில் குறி!

பெரும்பான்மை இல்லாத எந்தவொரு அரசாங்கமும், நிபந்தனைகளின் கீழ் செயல்பட வேண்டிய நிர்பந்தங்களை எதிர்கொள்ளும். அதுவும் ஜனநாய கம் காப்பதற்காக விஜய்க்கு ஆதரவு கொடுத்துள்ள திமுக கூட்டணி கட்சிகள், அவரது தன்னிச்சையான முடிவுகளுக்கு ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள். அதேபோல் எதிர்க்கட்சியான திமுகவும் மிகப்பெரும் வலுவாக உள்ளது. இவர்களை எதிர்கொண்டு முதல்வர் பதவியில் நீடிப்பது எளிதான காரியம் அல்ல. இதை உணர்ந்தே விஜய், திமுக கூட்டணி கட்சிகளின் ஆதரவு நிலைப்பாட்டை கடந்து பிளவுபட்ட அதிமுக அணியின் ஆதரவுக்கு ஆர்வம் காட்டுகிறார். அதிர்ஷ்டவசமாக கிடைத்த முதல்வர் வாய்ப்பை எந்த நிலையிலும் விட்டு விடக்கூடாது என்பதில் மட்டும் உறுதியாக இருக்கிறார் என்பது தவெக முன்னணி நிர்வாகிகள் கூறும் ரகசிய தகவல்.

### சர்ச்சைக்குரிய முதல் சறுக்கல்!

விஜய்யின் ஜோதிடர் ரதன்பண்டிட் வெற்றிவேல், முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது. இதற்கு தி.மு.க., காங்கிரஸ், வி.சி.க., சி.பி.எம்., சி.பி.ஐ. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. கொள்கை தலைவர்களாக பெரியாரையும், அம்பேத்கரையும் அறிவித்திருக்கும் விஜய், தனது ஆஸ்தான ஜோதிடருக்கு அரசு உயர்பதவி வழங்கியது அறிவியலுக்கே அபத்தமானது என்று கண்டனங்கள் வலுத்தது.

மேலும் சட்டமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தில் பேசிய தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேம லதா, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன்அன்சாரி ஆகியோர், விஜய் முன்பே இதற்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து ஜோதிடரை பதவியில் இருந்து நீக்கி அரசு சார்பில் அறிவிப்பு வெளி யிடப்பட்டது. இந்த நிகழ்வு விஜய் அரசுக்கு சர்ச்சைக்குரிய முதல் சறுக்கல் என்று மக்கள் மத்தியில் பரவலாக பேச்சு எழுந்துள்ளது.

### மூன்றாவது இடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து!

விஜய் தலைமையிலான தமிழ் நாடு அமைச்சரவை பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்பட்ட விவகாரமும் அரசியல் சர்ச்சையாக உரு வெடுத்தது. இதேபோல் தற்காலிக கவர்னர் பதவியேற்பு விழாவிலும் இந்தநிலையே தொடர்ந்தது. தமி ழக வெற்றிக்கழகம் என்ற பெயரில் கட்சி நடத்துபவர், தமிழுக்கு முன் னுரிமை தரவேண்டும் என்பதைக் கூட உணராத நிலையில் இருக் கக்கூடாது என்று அறிவுறுத்தினர்.

இந்தநிலையில் எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்கு விளக்கம் அளித்து அமைச்சர் ஆதவ்அர்ஜூனா அறிக்கை ஒன்றை வெளியிட்டார். ஆளுநர் அலுவலக விதிமுறைகளின் படி அந்த நிகழ்ச்சிகள் நடந்தது. இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காது. தமிழக வெற்றிக்கழகத்தின் தலைமை யில் அமைந்திருக்கும் தமிழ்நாடு அரசுக்கு இதில் உடன்பாடில்லை என்று விளக்கம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

### சபாநாயகரின் முடிவு என்ன?

தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியுள்ளது அ.தி.மு.க.வின் உட்கட்சிபிரச்சினை. இதற்கு மத்தியில் விஜய்க்கு ஆதரவாக வாக்களித்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் விவகாரம் தொடர்ந்து பேசு பொருளாகி வருகிறது. சட்டமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு, 144 வாக்குகளுடன் வெற்றி பெற்றது. இதில் அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடு அரசுக்கு எதிராக இருந்தது. ஆனால் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையிலான 25 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்த கட் சியின் கொறடா உத்தரவை மீறி த.வெ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இந்த நடவடிக்கை அ.தி.மு.க.வில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது. இதையடுத்து எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. தரப்பு, கொறடா உத்தரவை மீறிய 25 எம்.எல்.ஏ.க்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் மனு அளித்துள்ளது. இந்த மனு மீது சபாநாயகர் என்ன நடவடிக்கை எடுப்பார் என்பதும் மிகுந்த எதிர்பார்ப்பாக உள்ளது.

### இந்த ஆட்சி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது!

பாஜ தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க. இரண்டாக பிளவுபட்டு நிற்கிறது. அதில் ஒரு தரப்பு விஜய் தலைமையிலான அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இதுபோன்ற ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் இருக்கும் ஒரு வீட்டிற்குப் புதிய சோபா செல்கிறது. அதனை தொடர்ந்து புதிய முதல்வர் விஜய் செல்கிறார். அந்த சோபாவுக்குள் என்ன இருக்கிறது? என்பது மர்மமாக உள்ளது. புதுமையான ஆட்சி என்று கூறும் விஜய், புஷ்பா படப்பாணியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த வகையில் நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு முன்பாகவே இந்த ஆட்சி, மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது. இவர்களுக்கு நம்பிக்கை கொடுத்த எங்கள் தோழமை கட்சியின் நம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக சிதைந்து கொண்டிருக்கிறது என்று நம்பிக்கை வாக்கெடுப்பில் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அவரது பேச்சு தற்போது சமூகவலைதளங்களில் வைரலாகி பிரளயத்தை ஏற்படுத்தியுள்ளது.

### அ.தி.மு.க. அணிக்கு காங்கிரஸ் எதிர்ப்பு!

விஜய்க்கு அ.தி.மு.க.வின் ஒரு அணி ஆதரவு வழங்கியது குறித்து பேசிய காங்கிரஸ் எம்.பி.கார்த்தி சிதம்பரம், ‘நம்பிக்கை வாக்கெடுப்பில் விஜய் வெற்றி பெற்றுவிட்டார். அ.தி.மு.க.வில் நடந்தது ஒரு தனி விவகாரம். விஜய்க்கு ஆதரவாக வாக்களித்த அணியை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று மனுக்கள் செல்லலாம். அது நீதிமன்றத் திற்கும் போகலாம். அந்த அணியின் எதிர்காலம் என்னவாகும் என்பதில் இன்னும் தெளிவில்லை. எனவே இவர் களை ஆட்சிக்குள் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. இவர்கள் இல்லாமலேயே ஆட்சி நடத்தும் வாய்ப்பு விஜய்க்கு இருக்கிறது,” என்று தெரிவித் துள்ளார். இது அரசியல் வட்டாரத்தில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. குறிப்பாக அ.தி.மு.க. ஆதரவு அணியை அமைச்சரவையில் சேர்ப்பதை காங்கிரஸ் விரும்ப வில்லையா? என்ற பெரும் கேள்வியும் எழுந்துள்ளது.

நன்றி: **தினகரன்** 17.05.2026

### உதயநிதி பேச்சு பிரளயமாகிறது!

**பா.ஜ. தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க. இரண்டாக பிளவுபட்டு நிற்கிறது. அதில் ஒரு தரப்பு விஜய் தலைமையிலான அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இதுபோன்ற ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் இருக்கும் ஒரு வீட்டிற்கு புதிய சோபா செல்கிறது. அதனை தொடர்ந்து புதிய முதல்வர் விஜய் செல்கிறார். அந்த சோபாவுக்குள் என்ன இருக்கிறது? என்பது மர்மமாக உள்ளது. புதுமையான ஆட்சி என்று கூறும் விஜய், புஷ்பா படப்பாணியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த வகையில் நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு முன்பாகவே இந்த ஆட்சி, மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது. இவர்களுக்கு நம்பிக்கை கொடுத்த எங்கள் தோழமை கட்சியின் நம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக சிதைந்து கொண்டிருக்கிறது என்று நம்பிக்கை வாக்கெடுப்பில் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அவரது பேச்சு தற்போது சமூகவலை தளங்களில் வைரலாகி பிரளயத்தை ஏற்படுத்தியுள்ளது.**